# <u>நீதிமொழிகள் மற்றும் சங்கீதங்களில் உள்ள நீதிமான்களுக்கான வேதவசன ஆசீர்வாதங்கள்</u>

நேர்மையாளர்களுக்கு அவர் மெய்யான ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார். **(நீதிமொழி 2:7)**

மாறுபாடானவன் கர்த்தருக்கு அருவருப்பானவன்; நீதிமான்களோடோ அவருடைய இரகசியமிருக்கிறது. **(நீதிமொழி 3:32)**

துன்மார்க்கருடைய வீட்டில் கர்த்தருடைய சாபமிருக்கும்; நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிப்பார். **(நீதிமொழி 3:33)**

நீதிமான்களின் பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற விடியற்கால வெளிச்சத்தைப்போலிருக்கிறது. **(நீதிமொழி 4:18)**

ஞானமுள்ளவனுக்குப் போதகம் பண்ணு, அவன் அதிக ஞானமுள்ளவனாவான்; நீதிமானுக்கு உபதேசம் பண்ணு, அவன் அதிக அறிந்துகொள்வான். **(நீதிமொழி 9:9)**

கர்த்தர் நீதிமானின் ஆத்துமாவைப் பசியாயிருக்கவிடார்; துன்மார்க்கரின் ஆசையையோ அவர் தள்ளிவிடுகிறார். **(நீதிமொழி 10:3)**

நீதிமானுடைய தலையின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்; துன்மார்க்கருடைய வாயோ கொடுமையை மூடிக்கொள்ளும். **(நீதிமொழி 10:6)**

நீதிமானின்பேர் ஆசீர்வாதமாய் நினைவுகூரப்படும்; துன்மார்க்கரின் பெயரோ அழுகிப்போகும். **(நீதிமொழி 10:7)**

நீதிமானின் வாய் ஜீவஊற்று; துன்மார்க்கரின் வாயோ கொடுமையை மூடிக்கொள்ளும். **(நீதிமொழி 10:11)**

நீதிமானுடைய பிரயாசம் ஜீவனுக்கேதுவாகும்; துன்மார்க்கனுடைய விளைவு பாவத்துக்கேதுவாகும். **(நீதிமொழி 10:16)**

நீதிமானின் நாவானது தெரிந்தெடுத்த வெள்ளியைப் போன்றது; துன்மார்க்கரின் இருதயம் அற்பமானதாயிருக்கும். **(நீதிமொழி 10:20)**

நீதிமானுடைய உதவிகள் அநேகரைப் போஷிக்கும்; மூடரோ புத்தியின்மையால் மடிந்துபோவார்கள். **(நீதிமொழி 10:21)**

துன்மார்க்கனுக்குப் பயப்படுகிற பயம் அவனுக்கு வரும்; நீதிமான்களுக்கோ அவர்கள் விரும்புகிறது கொடுக்கப்படும். **(நீதிமொழி 10:24)**

சுழல்காற்று கடந்துபோகும்போது துன்மார்க்கன் இல்லாமற்போவான்; நீதிமானோ நித்திய அஸ்திபாரமுள்ளவன். **(நீதிமொழி 10:25)**

நீதிமான்களின் நம்பிக்கை மகிழ்ச்சியாகும்; துன்மார்க்கரின் எதிர்பார்ப்போ அழியும். **(நீதிமொழி 10:28)**

கர்த்தருடைய வழி உத்தமனுக்கு அரணான கோட்டை; அக்கிரமக்காரருக்கோ அது அழிவு. **(நீதிமொழி 10:29)**

நீதிமான் என்றைக்கும் அசைக்கப்படுவதில்லை; துன்மார்க்கரோ பூமியில் குடியிருப்பதில்லை. **(நீதிமொழி 10:30)**

நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும்; மாறுபாடான நாவோ அறுப்புண்டுபோம். **(நீதிமொழி 10:31)**

நீதிமானுடைய உதவிகள் பிரியமானவைகளைப் பேசும்; துன்மார்க்கருடைய வாயோ மாறுபாடானவைகளைப் பேசும். **(நீதிமொழி 10:32)**

உத்தமர்களை அவர்கள் உத்தமத்தன்மை நடத்தும்; துரோகிகளை அவர்கள் கோணல்புத்தி அழிக்கும். **(நீதிமொழி 11:3)**

நீதிமான்கள் வாழ்ந்தால் பட்டணம் களிகூரும்; துன்மார்க்கர் அழிந்தால் ஆனந்தக் கூச்சலிடுவார்கள். **(நீதிமொழி 11:10)**

நீதிமான்களின் ஆசை நன்மையே; துன்மார்க்கரின் எதிர்பார்ப்போ கோபத்துக்கேதுவாகும். **(நீதிமொழி 11:23)**

தன் ஐசுவரிக்காக நம்புகிறவன் விழுவான்; நீதிமான்களோ தளிரைப்போல செழிப்பார்கள். **(நீதிமொழி 11:28)**

நீதிமானின் பலன் ஜீவவிருட்சம்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானி. **(நீதிமொழி 11:30)**

இதோ, நீதிமானுக்கு பூமியிலே பலன் கிடைக்குமேயானால், துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் அதிகமாய்க் கிடைக்குமன்றோ **(நீதிமொழி 11:31)**

துன்மார்க்கன் தீமையினால் நிலைநிற்கமாட்டான்; நீதிமான்களின் வேரோ ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை. **(நீதிமொழி 12:3)**

துன்மார்க்கர் கவிழ்க்கப்பட்டு இல்லாமற்போவார்கள்; நீதிமான்களின் வீடோ நிலைநிற்கும். **(நீதிமொழி 12:7)**

துன்மார்க்கன் உதடுகளின் பாவத்தால் கண்ணியில் சிக்குண்டுகிறான்; நீதிமானோ இடுக்கணுக்கு நீங்கிவிடுவான். **(நீதிமொழி 12:13)**

நீதிமானுக்கு ஒரு தீங்கும் நேரிடாது; துன்மார்க்கரோ தீமையால் நிறப்பப்படுவார்கள். **(நீதிமொழி 12:21)**

நீதிமான் தன் தோழனுக்கு வழிகாட்டுகிறான்; துன்மார்க்கரின் வழியோ அவர்களைத் தவறப்பண்ணும். **(நீதிமொழி 12:26)**

பாவிகளைத் தீங்கு தொடரும்; நீதிமான்களுக்கோ நன்மை பலனாகக் கொடுக்கப்படும். **(நீதிமொழி 13:21)**

நீதிமான் தன் ஆத்துமாவிற்குத் திருப்தியாகப் புசிப்பான்; துன்மார்க்கரின் வயிற்றிலோ பஞ்சம் இருக்கும். **(நீதிமொழி 13:25)**

துன்மார்க்கருடைய வீடு அழியும்; செம்மையானவர்களுடைய கூடாரமோ செழிக்கும். **(நீதிமொழி 14:11)**

நீதிமானுடைய வீட்டில் மிகுந்த பொக்கிஷமுண்டு; துன்மார்க்கனுடைய வருவாயிலோ கலக்கமுண்டு. **(நீதிமொழி 15:6)**

துன்மார்க்கரின் பலி கர்த்தருக்கு அருவருப்பு; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம். **(நீதிமொழி 15:8)**

கர்த்தருடைய நாமம் பலத்த கோபுரம்; நீதிமான் அதற்குள் ஓடி அடைக்கலமாய் இருப்பான். **(நீதிமொழி 18:10)**

உத்தமமாய் நடக்கிற நீதிமானுடைய பிள்ளைகள் அவனுக்குப் பின்பாக்கியவான்களாய் இருப்பார்கள். **(நீதிமொழி 20:7)**

நீதிமான் ஏழுதடவை விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீமையில் இடறிவிழுவார்கள். **(நீதிமொழி 24:16)**

துன்மார்க்கன் ஒருவனும் துரத்தாதபோது ஓடிப்போகிறான்; நீதிமான்களோ சிங்கத்தைப்போல தைரியமாயிருக்கிறார்கள். **(நீதிமொழி 28:1)**

# <u>சங்கீதம்</u>

கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதிப்பீர்; கவசத்தினால் சூழ்கிறதுபோல தயையினால் அவனைச் சூழ்ந்துகொள்வீர். (**சங்கீதம் 5:12)**

அங்கே அவர்கள் மகா பயமடைந்தார்கள்; தேவன் நீதிமான்களின் சந்ததியோடே இருக்கிறார். (**சங்கீதம் 14:5)**

நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களினின்றும் விடுவிக்கிறார். (**சங்கீதம் 34:17)**

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவையெல்லாவற்றினின்றும் அவனை விடுவிப்பார். (**சங்கீதம் 34:19)**

துன்மார்க்கரின் புயங்கள் முறிக்கப்படும்; நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார். (**சங்கீதம் 37:17)**

நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்து, என்றைக்கும் அதின்மேல் வாசமாயிருப்பார்கள். (**சங்கீதம் 37:29)**

உன் பாரத்தைக் கர்த்தர்மேல் வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் அசைபணிய வொட்டார். (**சங்கீதம் 55:22)**

அப்பொழுது, மெய்யாகவே நீதிமானுக்குப் பலன் உண்டு என்றும், பூமியிலே நியாயஞ்செய்யும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும் மனுஷன் சொல்லுவான். (**சங்கீதம் 58:11)**

துன்மார்க்கருடைய கொம்புகளையெல்லாம் நான் அறுத்துப்போடுவேன்; நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப்படும். (**சங்கீதம் 75:10)**

நீதிமான் பனைமரத்தைப்போல செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல வளருவான். (**சங்கீதம் 92:12)**

நீதிமானுக்காக வெளிச்சமும், இருதயத்தில் உத்தமமானவர்களுக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது. (**சங்கீதம் 97:11)**

நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரம் தொனிக்கிறது; கர்த்தருடைய வலதுகரம் பராக்கிரமத்தைச் செய்கிறது. (**சங்கீதம் 118:15)**

கர்த்தர் குருடரின் கண்களைத் திறக்கிறார்; கர்த்தர் முறிக்கப்பட்டவர்களை நிமிர்த்துகிறார்; கர்த்தர் நீதிமான்களில் அன்புகூருகிறார். (**சங்கீதம் 146:8)**

இதோ, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செவ்வையாயிராமல் இளைத்துப்போகும்; நீதிமானோ தன் விசுவாசத்தால் பிழைப்பான். (**ஆபக்கூடக்கு 2:4)**

நீதிமானுக்கு நன்மை நடக்கும் என்று சொல்லுங்கள்; அவர்கள் தங்கள் கிரியைகளின் பலனைப் புசிப்பார்கள். (**ஏசாயா 3:10)**